සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
  - பகுதி I – **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
    - ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிந்து **அதன் இலக்கத்தை** எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
  - பகுதி II – மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
    - ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.
* பகுதி I, பகுதி II ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I | |
|---|---|
| பகுதி | புள்ளிகள் |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி I

- **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மிகப் பொருத்தமான விடையைக்** கீழே தரப்பட்டுள்ள **A, B, C, D, E** ஆகிய செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.



A B C D E

1. A எழுத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள செதுக்கல் தகடு,
   (1) மரச்சட்டகத்தின் மீது செய்யப்பட்ட ஒரு சட்டகச் செதுக்கல் ஆகும்.
   (2) எம்பக்க தேவாலயத்தின் மரச்சட்டகச் செதுக்கல் ஆகும்.
   (3) பனாவிட்டிய அம்பலத்தின் மரச்சட்டகச் செதுக்கல் ஆகும்.
   (4) எம்பக்க அம்பலத்தின் மரச்சட்டகச் செதுக்கல் ஆகும்.
   (5) கம்பளைகால நுட்பமுறையில் செய்யப்பட்ட நவீன மரச் செதுக்கல் ஆகும். (.........)

2. B எழுத்தால் காட்டப்பட்டுள்ள விசேட கைப்பிடிச் செதுக்கல்,
   (1) பொலனறுவை எச்சங்களிடையே கண்டெடுக்கப்பட்ட கைப்பிடியாகும்.
   (2) மனித வடிவங்களை உள்ளடக்கிச் செய்யப்பட்ட பொலனறுவைகால விசேட கைப்பிடியாகும்.
   (3) பொலனறுவைச் செதுக்கல் கலைச் சிற்பியின் திறமையை எடுத்தியம்பும் மனித வடிவங்களைக் கொண்ட கைப்பிடியாகும்.
   (4) பொலனறுவை திவங்க சிலைமனைக்கு அருகில் அமைந்துள்ள கைப்பிடியாகும்.
   (5) பொலனறுவை இலங்காதிலக விகாரையின் முன்னால் உள்ள மனித வடிவங்களைக் கொண்ட கைப்பிடியாகும். (.........)

3. C எழுத்தால் காட்டப்பட்டுள்ள வட்ட அமைப்புடைய செதுக்கல் தகட்டில்,
   (1) புத்தபெருமானை வணங்கச் செல்லும் அனேபிட்டு சிடானனும் பக்தர்களும் காணப்படுகின்றனர்.
   (2) அனேபிட்டு சிடானன் ஜேதவனப் பூங்காவை புத்தபெருமானுக்கு பூஜை செய்யும் தன்மை காணப்படுகிறது.
   (3) அனேபிட்டு சிடானனால் சவத் நகரில் விகாரை ஒன்றைக் கட்டுவிக்கும் தன்மை காணப்படுகிறது.
   (4) அனேபிட்டு சிடானன் துன்பப்படுவோருக்கு தானம் வழங்கும் சந்தர்ப்பம் சித்திரிக்கப்படுகிறது.
   (5) சவத் நகர ஜேதவனராமைக்குச் செல்லும் பக்தர்கள் காணப்படுகின்றனர். (.........)

4. D எழுத்தால் காட்டப்பட்டுள்ள செதுக்கல் தகடு,
   (1) புத்தபெருமான் சங்கஸ்ஸபுரத்திற்கு வருகைதரும் நிகழ்வைக் காட்டும் சாஞ்சிச் செதுக்கலாகும்.
   (2) புத்தபெருமான் சங்கஸ்ஸபுரத்திற்கு வருகைதரும் நிகழ்வைக் காட்டும் பாரூத் கல்வேலிச் செதுக்கலாகும்.
   (3) அமராவதியில் கிடைக்கப்பெற்ற புத்தபெருமான் சங்கஸ்ஸபுரத்திற்கு வருகைதரல் என்னும் செதுக்கலாகும்.
   (4) அரசமர வழிபாட்டை வெளிக்காட்டும் சாஞ்சிச் செதுக்கலாகும்.
   (5) புத்த பெருமானைக் காட்டுவதற்கு அரசமரத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாரூத் செதுக்கலாகும். (.........)

[பக். 2 ஐப் பார்க்க

5. E எழுத்தால் காட்டப்படும் தூண் செதுக்கல்,
   (1) கிரேக்க செதுக்கல் கலைச் சிற்பியின் திறனை வெளிக்காட்டும் சிறந்த உதாரணமாகும்.
   (2) உரோமானிய சிற்பக்கலைச் சிற்பியின் திறனை வெளிக்காட்டும் சிறந்த உதாரணமாகும்.
   (3) வெற்றித் தகவல்களைக் கொண்டு செதுக்கப்பட்ட உரோமானியத் தூண் செதுக்கலாகும்.
   (4) கிரேக்க புராணக் கதைகளுக்காகச் செதுக்கப்பட்ட தூண் செதுக்கலாகும்.
   (5) உரோமானியர்களால் கிரேக்கச் செதுக்கல்கள் பின்பற்றப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகும். (.........)


- **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மிகப் பொருத்தமான விடையைக்** கீழே தரப்பட்டுள்ள F, G, H, I, J எனப் பெயரிடப்பட்டுள்ள உருவக் குறிப்புப் பகுதிகளைக் கொண்டு தெரிவுசெய்க.


F


G


H


I


J

6. இங்கு காணப்படும் உருவக் குறிப்புப் பகுதிகளிடையே சித்திரக்கலை ஆக்கங்களாவன,
   (1) F, G, H உருவக் குறிப்புப் பகுதிகளாகும். (2) G, H, I உருவக் குறிப்புப் பகுதிகளாகும்.
   (3) H, I, J உருவக் குறிப்புப் பகுதிகளாகும். (4) I, J, F உருவக் குறிப்புப் பகுதிகளாகும்.
   (5) J, F, G உருவக் குறிப்புப் பகுதிகளாகும். (.........)

7. இந்த உருவக் குறிப்புப் பகுதிகளிடையே புராதன நாகரிகத்துடன் தொடர்புடைய நிர்மாணிப்புக்களை நினைவூட்டுவன,
   (1) F, H உருவக் குறிப்புகள் ஆகும். (2) G, I உருவக் குறிப்புகள் ஆகும்.
   (3) H, J உருவக் குறிப்புகள் ஆகும். (4) I, F உருவக் குறிப்புகள் ஆகும்.
   (5) F, J உருவக் குறிப்புகள் ஆகும். (.........)

8. புத்தர் சரிதையின் நிகழ்வொன்றைக் குறியீடு மூலம் சித்திரிக்கின்றவொரு சந்தர்ப்பத்தை நினைவூட்டுகின்ற உருவக் குறிப்புப்பகுதி
   (1) F (2) G (3) H (4) I (5) J (.........)

9. பாறைச் சுவரொன்றில் வரையப்பட்ட உயர் சித்திரக்கலை பற்றி நினைவூட்டுகின்ற சித்திரப்பகுதி
   (1) F (2) G (3) H (4) I (5) J (.........)

10. ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட சித்திரத்தொடரை நினைவூட்டுகின்ற சித்திரப்பகுதி
   (1) F (2) G (3) H (4) I (5) J (.........)

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

11. அரூபவாதக் கலைப் பண்புகள் வெளிப்படும் வகையில் மனித வடிவங்களை உள்ளடக்கி நிர்மாணிக்கப்படுகின்ற சுவர்ச் செதுக்கல் ஒன்றின் வெற்றி தங்கியிருப்பது,
   (1) மனித வடிவை இயற்கைப் பண்புகள் வெளிப்படும் வகையில் பயன்படுத்துவதிலாகும்.
   (2) உருவக் குறிப்புகளை நவீன வடிவமைப்பில் பயன்படுத்துவதிலாகும்.
   (3) உயிர்ப் பரிமாணங்களை மாற்றிப் பயன்படுத்துவதிலாகும்.
   (4) வரைபடக் குறிப்புகளை உருத்திரிப்பு முறையில் வரைவதிலாகும்.
   (5) மனித வடிவை யதார்த்த பூர்வமாக வரைவதிலாகும். (.........)

12. அசையாப் பொருட் கற்கையில் பொருட்களின் யதார்த்த வடிவை வரைவதில் கவனம் செலுத்தப்படுவதற்குக் காரணம்,
   (1) காண்பவற்றை வரைதல் தெரிந்தவற்றை வரைவதிலும் பார்க்க இலகுவாக இருப்பதனாலாகும்.
   (2) தமது எண்ணப்படி பொருட்களின் பரிமாணங்களை மாற்றியமைத்து வரைவதனாலாகும்.
   (3) பொருட்களின் இயல்புகளை இனங்கண்டு அவற்றின் வெளிப்புறத் தன்மைகளை வெளிப்படுத்தும் ஆற்றல் கிடைப்பதனாலாகும்.
   (4) மனதில் உருவாகும் சிந்தனை வடிவங்களைக் கொண்டு கற்பனைச் சித்திரிப்பைத் தடுத்துக்கொள்ள முடிவதனாலாகும்.
   (5) ஞாபகத்தைக் கொண்டு வரைவதனால் சிறப்பான ஆக்கங்கள் உருவாக்கப்படாமையினாலாகும். (.........)

13. கண்டியகால விகாரைகளின் சுவர்ச் சித்திரங்கள் நீண்ட காலமாக பாதுகாப்புடன் இருப்பதற்குக் காரணம்,
   (1) விகாரைகளின் உட்பகுதிச் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டிருப்பதனாலாகும்.
   (2) தேசிய மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வர்ணங்களைப் பயன்படுத்தி வரைந்து, வைத்தி பூசப்பட்டிருப்பதனாலாகும்.
   (3) சித்திரம் வரையும் பொழுது வர்ணங்களைத் தோறண எண்ணெய்யுடன் கலப்பதனாலாகும்.
   (4) வெள்ளைச்சாந்து பூசி அதன்மீது இரேகையால் வரைந்து வர்ணம் தீட்டப்பட்டு இருப்பதனாலாகும்.
   (5) சுண்ணாம்புச் சாந்து பூசிய சுவர்களின்மீது சித்திரங்கள் வரையப்பட்டிருப்பதனாலாகும். (.........)

பக். 3ஐப் பார்க்க

14. மிகப் பெரிய விளம்பரப் பலகைகளை அச்சுப்பதிப்பதற்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் அச்சிடல் முறை
(1) உயர்தள அச்சிடல் முறை
(2) உள்தள அச்சிடல் முறை
(3) சமதள அச்சிடல் முறை
(4) சில்ஸ் கிறீன் அச்சிடல் முறை
(5) டிஜிட்டல் அச்சிடல் முறை (………)

15. அச்சு ஒன்றின் உதவியுடன் சிலைகளை நிர்மாணிப்பதற்காக மூல (முதல்) வடிவத்தைத் தயாரித்துக் கொள்வதற்கு மிக இலகுவானதும் பொருத்தமானதுமான மூலப்பொருள்
(1) சீமெந்து
(2) பிளாஸ்ரர் பரிஸ்
(3) பைபர் கிளாஸ்
(4) களிமண்
(5) மெழுகு (………)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான விடையைக்** கீழே தரப்பட்டுள்ள **K, L, M, N, O** எனக் காட்டப்பட்டுள்ள சிற்பங்களிலிருந்து தெரிவு செய்க.


K


L


M


N


O

16. **K** எழுத்தால் காட்டப்பட்டுள்ள சிலை,
(1) பொலனறுவை அலாகன பிரிவெனா வளவினுள் காணப்படுகின்ற சிலையாகும்.
(2) பொலனறுவை கல்விகாரையின் சமாதி புத்தர் சிலையாகும்.
(3) பொலனறுவை பபலு விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள புத்தர் சிலையாகும்.
(4) பொலனறுவை வட்டதாகேயில் காணப்படுகின்ற புத்தர் சிலையாகும்.
(5) பொலனறுவை லங்காதிலகவுக்கு அண்மையில் காணக்கூடியதான சிலையாகும். (………)

17. **L** எழுத்தால் காட்டப்பட்டுள்ள தர்மசக்கர முத்திரையுடன் கூடிய காந்தார தேசத்தில் கிடைக்கப்பெற்ற புத்தர் சிலை,
(1) தக்திபஹி புத்தர் சிலையாகும்.
(2) ஹோட்டிமந்தார் புத்தர் சிலையாகும்.
(3) பிரெகம் புத்தர் சிலையாகும்.
(4) கத்ரா புத்தர் சிலையாகும்.
(5) சஹ்ரி பக்லொல் புத்தர் சிலையாகும். (………)

18. **M** எழுத்தால் காட்டப்பட்டுள்ள ஐரோப்பியக் கலை வரலாற்றில் அதி சிறந்த நிர்மாணிப்பான இது,
(1) கிரேக்க மேன்மைக் காலத்தில் பூரணப்படுத்தப்பட்ட சிலையாகும்.
(2) கிரேக்க ஹெலனிஸ்ரிக் காலத்தில் பூரணப்படுத்தப்பட்ட சிலையாகும்.
(3) கிரேக்க சிற்பக் கலைஞர் பீடியஸ் இன் நிர்மாணிப்பாகும்.
(4) உரோமச் சிற்பிகள் கிரேக்க ஆக்கங்களைப் பின்பற்றிய ஒரு சந்தர்ப்பமாகும்.
(5) யுத்த வெற்றியை நினைவுகூரும் பொருட்டு செய்யப்பட்ட கிரேக்கச் சிலையாகும். (………)

19. **N** எழுத்தால் காட்டப்படும் சிலை பிரதிபலிப்பது அரசனை எனவும், கையில் தாங்கி இருக்கும் பொருள் அரசைக் குறிக்கும் குறியீடு எனவும் கருத்து வெளியிட்டவர்,
(1) கலாநிதி பறனவிதான அவர்கள் ஆவார்.
(2) ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் ஆவார்.
(3) போகல் பண்டிதர் ஆவார்.
(4) H.C.P. பெல் அவர்கள் ஆவார்.
(5) சிறிகுணசிங்க அவர்கள் ஆவார். (………)

20. **O** எழுத்தால் காட்டப்பட்டுள்ள இந்துசமயச் சிலை,
(1) அப்பர் சுவாமியைச் சித்திரிக்கும் சோழர் காலச் சிலையாகும்.
(2) சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சித்திரிக்கும் இந்துசமயச் சிலையாகும்.
(3) விஷ்ணு தெய்வத்தைச் சித்திரிக்கும் பல்லவர் காலச் சிலையாகும்.
(4) வீனாதரமூர்த்தி எனப்படும் சோழர் காலச் சிலையாகும்.
(5) நடராஜரைச் சித்திரிக்கும் சோழர் காலச் சிலையாகும். (………)

[பக். 4 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான விடையைக்** கீழே தரப்பட்டுள்ள **P, Q, R, S, T** என்ற சித்திரங்களிலிருந்து தெரிவுசெய்க.


P


Q


R


S


T

21. **P** எழுத்தால் காட்டப்பட்டுள்ள அலங்கார வர்ணச் சித்திரம்,
    (1) நவீனபாணியிலான சுதந்திரமான வடிவமைப்புக்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.
    (2) சுமண திசாநாயக்கவினால் நிர்மாணிக்கப்பட்ட பத்திக் அலங்காரமாகும்.
    (3) L.T.P. மஞ்சுஸ்ரீ யினால் நவீனபாணியிலான வடிவமைப்புகளைக் கொண்டு ஆக்கப்பட்ட வாழ்த்துமடலாகும்.
    (4) சுமண திசாநாயக்க சிறுவர் நூல் ஒன்றிற்காக வரைந்த கதை விளக்கச் சித்திரமாகும்.
    (5) பத்திக் முறையில் தற்காலக் கலைஞர் ஒருவரால் செய்யப்பட்ட புதியதொரு நிர்மாணிப்பாகும். (.........)

22. **Q** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பொருட்கூட்டச் சித்திரம்,
    (1) தற்காலச் சித்திரக் கலைஞர் ஒருவரின் அசையாப் பொருட்கூட்ட ஒழுங்கிணைப்புச் சித்திரமாகும்.
    (2) பொருட்களின் இயல்பான தன்மைகளை கருத்திற் கொள்ளாது செய்யப்பட்டவொரு நிர்மாணிப்பாகும்.
    (3) சுதந்திரமான ஒழுங்கமைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டவொரு பொருட்கூட்டப் படவாக்கமாகும்.
    (4) W.J.G. பீலின் என்ற கலைஞரால் நவீன வடிவமைப்புகளைப் பயன்படுத்தி வரையப்பட்டவொரு சித்திரமாகும்.
    (5) ஜோர்ஜ் கீட்டினால் கனவடிவவாத எண்ணக்கருவைக் கொண்டு செய்யப்பட்டவொரு நிர்மாணிப்பாகும். (.........)

23. **R** எழுத்தால் வெளிக்காட்டப்பட்டுள்ள சித்திரம்,
    (1) இந்திய மக்களின் மரபுரீதியான வாழ்க்கைப் பண்புகளை வெளிப்படுத்தும் ஜெமினி றோயின் சித்திரமாகும்.
    (2) அமிர்தா சேர்கிலினால் வரையப்பட்ட 'மூன்று பெண்கள்' என்னும் பெயரால் அறியப்படும் சித்திரமாகும்.
    (3) இந்திய நவீன கலைஞர் ஒருவரின் 'மணப்பெண்' எனப்படும் புதிய படைப்பாகும்.
    (4) 'மலைநாட்டு மங்கையர்' என்னும் பெயரிலான நந்தலால் போஸ்சின் நிர்மாணிப்பாகும்.
    (5) இந்திய மக்கள் வாழ்க்கையை விளக்குகின்ற அபனிந்த்ரநாத் தாகூரின் சித்திரமாகும். (.........)

24. **S** எழுத்தால் காட்டப்பட்டுள்ள மடோனா சித்திரம்,
    (1) அல்பா மடோனா என்னும் பெயரால் அறியப்படுவதாகும்.
    (2) சிஸ்ரயின் மடோனா என்னும் பெயரால் அறியப்படுவதாகும்.
    (3) மடோனா ஒப் த டியுக் என்னும் பெயரால் அறியப்படுவதாகும்.
    (4) மடோனா ஒப் த மெடோ என்னும் பெயரால் அறியப்படுவதாகும்.
    (5) மடோனா வித் பிஷ் என்னும் பெயரால் அறியப்படுவதாகும். (.........)

25. **T** எழுத்தால் காட்டப்பட்டுள்ள சித்திரம்,
    (1) போல் கிலீயின் 'சின்பாட்' என்னும் பெயரால் அறியப்படும் சித்திரமாகும்.
    (2) போல் கிலீயின் 'விலாR' என்னும் பெயர் கொண்ட சித்திரமாகும்.
    (3) டாலியின் 'தனது சிலை' என்னும் பெயரால் அறியப்படும் சித்திரமாகும்.
    (4) ஜோன் மீறோவின் 'பெண்ணின் சிலை' என்னும் பெயரால் அறியப்படும் சித்திரமாகும்.
    (5) போல் கிலீயின் 'சன்சியோ' என்னும் பெயரால் அறியப்படும் சித்திரமாகும். (.........)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும், அதற்கு முன்னால் உள்ள கட்டடக்கலை நிர்மாணிப்பைக் கொண்டு விடைதருக.

26. இங்கு காணப்படும் கட்டடம்,
    (1) கண்டிய கால கட்டடக்கலைப் பண்பைக் கொண்ட கூரையுடனான கட்டடமாகும்.
    (2) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனால் தலதாமாளிகைக்கு அருகாமையில் கட்டப்பட்ட கட்டடமாகும்.
    (3) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் காலத்தில் தேவேந்திர மூலாச்சாரியினால் கட்டப்பட்டதாகும்.
    (4) இலங்கையின் கட்டடக்கலையின் தனித்துவத்தை உலகிற்கு வெளிக்காட்டக்கூடியவொரு மாதிரியாகும்.
    (5) அரசர்கள் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்காகக் கட்டப்பட்ட அரச மண்டபமாகும். (.........)



27. இங்கு காணப்படும் கட்டடக்கலை நிர்மாணிப்பு,
    (1) பொலனறுவையின் புராதன கட்டடங்களிடையே ஏழு மாடிகளுடன் கூடிய கூம்பக வடிவுடைய மாளிகையாகும்.
    (2) பொலனறுவை தலதா பிரகாரத்தில் அமைந்துள்ள ஏழு மாடிகளுடன் கூடிய ஸ்தூபி நிர்மாணிப்பாகும்.
    (3) ஒன்றுக்கொன்று சிறிதாக அமையுமாறு ஏழு மாடிகளைக் கொண்ட பொலனறுவையில் கட்டப்பட்ட சமய நினைவுச் சின்னமாகும்.
    (4) பொலனறுவை தலதாப் பிரகாரத்தில் அமைந்துள்ள இந்துசமய வழிபாட்டுத் தலமாகும்.
    (5) அநுராதபுரத்தில் இருந்து பொலனறுவைக்குப் பரவலடைந்த கட்டடக்கலையின் ஓர் அங்கமாகும். (.........)



/பக். 5 ஐப் பார்க்க

28. அருகில் காணப்படும் இந்துசமயக் கோயில்,



(1) முதலாம் இராஜராஜசோழனால் தஞ்சாவூரில் கட்டப்பட்ட இராஜராஜேஸ்வரக் கோயிலாகும்.
(2) இராஜசிம்ம மன்னனால் மாமல்லவப்புரத்தில் கட்டப்பட்ட கடற்கரைக் கோயிலாகும்.
(3) நரசிம்மவர்மனால் மாமல்லவப்புரத்தில் கட்டப்பட்ட பஞ்சபாண்டவர் இரதங்களில் ஒன்றாகும்.
(4) இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கும்பகோணக் கோயிலாகும்.
(5) தென் இந்தியாவில் காணப்படும் ஒரேயொரு இந்துசமயக் கோயிலாகும். (.........)

29. இந்தக் கட்டடக்கலை நிர்மாணிப்பு,



(1) எல்லோராவிலுள்ள இந்துசமயக் குகைகளில் ஒன்றாகும்.
(2) கற்பாறையைத் தோண்டிக் கட்டப்பட்ட கோயிலாகும்.
(3) எல்லோராவிலுள்ள மிகப் பெரிய குகைக் கோயிலாகும்.
(4) எல்லோரவிலுள்ள பாறையை வெட்டி உருவாக்கப்பட்ட கோயிலாகும்.
(5) இந்துசமயக் குகைகளிடையே முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்ட குகையாகும். (.........)

30. இங்கு காணப்படுவது,



(1) பைசாந்தியக் கட்டடக்கலை நுட்பத்தில் கட்டப்பட்ட 'சன்விட்டாலே' தேவாலயமாகும்.
(2) பைசாந்தியக் கட்டடக்கலை நிர்மாணிப்பான 'ஹேகியா சொபியா' தேவாலயமாகும்.
(3) மொசெக் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரேயொரு 'பைசாந்தியத்' தேவாலயமாகும்.
(4) தியடோறா அரசியை நினைவுகூரும் வகையில் கட்டப்பட்ட 'பைசாந்தியத்' தேவாலயமாகும்.
(5) ஜஸ்ரீனியச் சக்கரவர்த்தியால் கட்டுவிக்கப்பட்ட 'அப்போலினறி நோவோ' தேவாலயமாகும். (.........)

- **31** தொடக்கம் **35** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

31. ஹிந்தகல குகை விகாரையின் பாறைச் சுவரில் வரையப்பட்டிருந்த 7ஆம் நூற்றாண்டுக்குரியதும் இன்று அழிந்த நிலையில் உள்ளதுமான சித்திரத்தின் மூலம் சித்திரிக்கப்படுவது,
(1) சக்கர தெய்வத்தால் அளிக்கப்பட்ட தானத்தை ஏற்பதற்கு புத்தபெருமான் ஆயத்தமாகும் தன்மையாகும்.
(2) புத்தபெருமான் இந்திரசாலக் குகைக்கு வருகைதந்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பமாகும்.
(3) புத்தபெருமான் துசித்த தேவலோகத்திற்குச் சென்று திவ்யராஜாவுக்கு தர்ம உபதேசம் செய்கின்ற சந்தர்ப்பமாகும்.
(4) தபஸ்சு, பல்லுக இருவரும் புத்தபெருமானிடமிருந்து கேஷதாதுவை ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமாகும்.
(5) புத்தபெருமான் தேவலோகத்தில் இருந்து இந்திரசாலக் குகைக்கு வருகைதந்த சந்தர்ப்பமாகும். (.........)

32. 18 ஆம் நூற்றாண்டில் மலைநாட்டு விகாரைகளுடன் தொடர்புற்ற வகையில் புதியதொரு சித்திரக்கலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்,
(1) பார்ப்போரிடம் உயர்தரமான கலை ரசனை மனப்பாங்கொன்றை உருவாக்குதலாகும்.
(2) மிக இலகுவாக பௌத்தர்களிடம் பக்தியையும் பௌத்த குணப்பண்புகளையும் தோற்றுவித்தலாகும்.
(3) பழமையான நுட்பமுறைகளை நீக்கிவிட்டு புதிய நுட்பமுறைகளை அறிமுகம் செய்தலாகும்.
(4) விகாரைச் சித்திரக்கலையை புதிய பாதையில் உயர்மட்டத்திற்குக் கொண்டு வருதலாகும்.
(5) விகாரைகளுக்கு பௌத்தர்களைக் கவர்ந்திழுத்துக் கொள்ளலாகும். (.........)

33. மொகலாயக் கலைக்கு அரச ஆதரவு கிடைக்கப்பெறாத சீரற்ற அரசியல் ஆட்சிக்காலம்
(1) ஹுமாயன் காலம்
(2) அக்பர் காலம்
(3) ஜஹாங்கீர் காலம்
(4) ஷாஜகான் காலம்
(5) அவுறங்கசீப் காலம் (.........)

34. பாரதத்தில் புத்தர் சரிதைகளைச் சித்திரிக்கும் செதுக்கல் ஆக்கங்களுக்கிடையே சிக்கலான ஒழுங்கமைப்புத் தன்மையையும் பாவத்துடன் கூடிய உணர்வு வெளிப்பாட்டையும் சித்திரித்த பெருமைக்குரியோர்,
(1) காந்தாரக் கலைஞர்கள்
(2) மதுராக் கலைஞர்கள்
(3) மௌரியக் கலைஞர்கள்
(4) அமராவதிக் கலைஞர்கள்
(5) சுங்கக் கலைஞர்கள் (.........)

35. மகாபலிபுரத்தில் உள்ள ஆகாய கங்கையின் இறக்கம் (கங்காவறோகன) என்னும் செதுக்கல் மூலம் சித்திரிக்கப்படுவது,
(1) மனிதர்களும் பிராணிகளும் நீராடும் சந்தர்ப்பமாகும்.
(2) அர்ஜுனன் சிவபெருமானால் சாபத்திலிருந்து விடுவிக்கப்படுதலாகும்.
(3) நீரைப் பெற்றுக்கொள்ளும் வரலாற்றுத் தகவல் கூறப்படுதலாகும்.
(4) மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் வழிபாட்டுக்குரிய கங்கை எனப்படும் நதி உருவாகின்ற தன்மையாகும்.
(5) தேவர்களும் மனிதர்களும் இணைந்து நீரைப் பூஜை செய்தலாகும். (.........)

பக்... 6 ஐப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே காணப்படும் சித்திரத்தைப் பயன்படுத்தி **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.



36. இச்சித்திரம் வரையப்பட்டது,
    (1) குளொட் மொனேயினாலாகும். (2) எட்வாட் மனேயினாலாகும்.
    (3) ஒகஸ்ரி றெனோவினாலாகும். (4) எட்கா டெகாவினாலாகும்.
    (5) கமிலி பிசாரோவினாலாகும். (.........)

37. இச்சித்திரத்தில் சித்திரிக்கப்படுவது,
    (1) திறந்தவெளிப் பிரதேசம் ஒன்றின் உல்லாசப் பயணமாகும்.
    (2) படகுப் பயணம் ஒன்றின்போது சுற்றுப்புற அழகை ரசிப்போராவர்.
    (3) உல்லாசப் பயணம் ஒன்றின் இடைவேளையாகும்.
    (4) படகுப் பயணம் ஒன்றின்போது பகல் உணவு உண்ணுதலாகும்.
    (5) விருந்தொன்றில் மது அருந்தும் நண்பர்கள் ஆவர். (.........)

38. இச்சித்திரத்தின் வர்ணப் பயன்பாட்டின் விசேட பண்பாவது,
    (1) வர்ணங்கள் தட்டையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமையாகும்.
    (2) ஒளியும் வர்ணமும் கலந்திருக்கும் இயல்பை வெளிப்படுத்தும் வகையில் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தலாகும்.
    (3) உடைந்த தூரிகைத் தடங்களாக வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தலாகும்.
    (4) பெரும்பாலும் வர்ணங்களைக் கலக்காது பயன்படுத்தப்பட்டிருக்கின்றமையாகும்.
    (5) அயல் வர்ணங்கள் புள்ளிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமையாகும். (.........)

39. இச்சித்திரத்தில் மனித வடிவங்களைப் பயன்படுத்தி இருப்பதிலுள்ள விசேடமானது,
    (1) மனித வடிவங்கள் விளக்கமாகக் காட்டப்படாமையாகும்.
    (2) பெண் உருவங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளமையாகும்.
    (3) மனித சலனச் செயற்பாடுகள், உணர்வுகள் வெளிப்படுமாறு யதார்த்த பூர்வமாக காட்டப்பட்டுள்ளமையாகும்.
    (4) கருத்தைத் தெளிவுபடுத்துவதற்கு மனிதச் செயற்பாடுகள் போதுமானளவு இல்லாமையாகும்.
    (5) மனித வடிவை ஒழுங்கிணைத்தலின்போது சுற்றாடலுடனான தொர்புகளை கவனத்திற் கொள்ளாமையாகும். (.........)

40. இச்சித்திரம் சிறந்த நிர்மாணிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை,
    (1) இயற்கையைவிட கற்பனை வெளிப்பாட்டிற்கு முதலிடம் அளித்த வெளிப்பாடு என்பதனாலாகும்.
    (2) அக்கடமி உத்தமபாணி குறைவின்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளமையினாலாகும்.
    (3) கனவடிவவாதப் பண்பை வெளிக்காட்டுவதற்குக் கலைஞர் முயன்றுள்ளமையினாலாகும்.
    (4) இயற்கைத் தன்மையிலும் பார்க்க பாவ உணர்வுகளை வெளிப்படுத்த முயன்றுள்ளமையினாலாகும்.
    (5) இயற்கைப் பொருட்களின் மீது விழும் ஒளியின் தாக்கத்தின் தன்மையை வர்ணப்பயன்பாட்டின் ஊடாக விளக்க முயன்றுள்ளமையினாலாகும். (.........)

* *

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

* இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.
* ஒவ்வொரு உப பகுதியிலிருந்தும் **ஒவ்வொரு** வினாவைத் தெரிவுசெய்து எல்லாமாக **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உப பகுதி 'அ'

(சித்திரக் கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1. வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சித்திரக்கலை அனுராதபுரக்காலத்தில் மிக முன்னேற்றகரமான நிலையை அடைந்துள்ளது.

   (i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சித்திரங்கள் காணப்படும் இடங்கள் **நான்கின்** பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

   (ii) அநுராதபுரத்தின் ஆரம்ப காலத்தில் சமயத் தேவைகளுக்காகச் சித்திரக்கலை பயன்படுத்தப்பட்டுள்ள தன்மையைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   (iii) காசியப்ப மன்னனின் குபேர எண்ணக்கரு காரணமாக சிகிரியா ஒரு மிகப் பெரிய கலைக்கூடமாகியது. ஆராய்க. (10 புள்ளிகள்)

2. இலங்கையின் முதல் புத்தர் சிலை அநுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதுடன் அதில் இந்திய குருகுலம் மற்றும் அரசாட்சிக் காலக் கலைப் பண்புகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

   (i) புத்தர் சிலை நிர்மாணிப்பின்போது புத்தர் சரிதையின் சந்தர்ப்பங்களைச் சித்திரிப்பதன் பொருட்டு பயன்படுத்தப்பட்ட முத்திரைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றிற்கு **இரண்டு** உதாரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

   (ii) அநுராதபுரகால புத்தர் சிலையில் இந்திய குப்தர் காலத்துத் தழுவல் இடம்பெற்றுள்ள ஒரு சந்தர்ப்பத்தை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   (iii) அநுராதபுரகால அவுக்கன புத்தர் சிலை நிர்மாணத்தின்போது எந்த இந்தியத் தழுவல் கிடைக்கப்பெற்றதெனக் குறிப்பிட்டு, அதனை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

### உப பகுதி 'ஆ'

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

3. கி.பி. 1ஆம் நூற்றாண்டில் காந்தார தேசத்தில் ஆரம்பமான புத்தர் சிலைக்கலை கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளை அடையும்போது மிக உயர்வான மட்டத்தை எட்டியது.

   (i) காந்தார தேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலையில் காணக்கூடியதான விசேட பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (ii) கி.பி. 1ஆம் நூற்றாண்டில் குஷாணியர்கள் புத்தர் சிலைகளின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு ஏதுவான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   (iii) காந்தார தேசத்திற்குச் சமகாலத்தில் ஆரம்பித்து மதுரா குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலை குப்தர் காலத்தை அடையும்போது மிகச் சிறப்பான மட்டத்தை அடைந்தது. இக்கூற்றை விபரிக்குக. (10 புள்ளிகள்)

4. அஜந்தா இந்தியக் கலை வரலாற்றில் கிடைக்கப்பெற்ற சிறந்த சித்திரக் கலைக்கூடம் என அறியப்படுகிறது.

   (i) அஜந்தாவின் 17 ஆவது குகையில் காணக்கூடிய சித்திரங்கள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (ii) அஜந்தா கலைஞரின் இரேகையும் வர்ணப் பயன்பாட்டு முறையும் பற்றிச் சுருக்கமாக மதிப்பீடு செய்க. (06 புள்ளிகள்)

   (iii) அஜந்தா குகை நிர்மாணிப்பு மற்றும் சித்திரக்கலை நிர்மாணிப்பு ஆகியவற்றின் மூலம் பூரணத்துவம் பெற்ற கலைஞர்களின் சிறந்த கலை ஆற்றல்கள் பலவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணம் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

### உப பகுதி 'இ'

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**5.** ஐரோப்பிய வரலாற்றில் பெருமைக்குரிய நாடான கிரேக்கம் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை நுட்பங்களினூடாக முழு உலகிற்கும் முன்மாதிரியாக அமைந்தது.

(i) கிரேக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட மேன்மைக்காலச் சிலைகள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(ii) அவற்றில் ஒன்று பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க. *(06 புள்ளிகள்)*

(iii) கிரேக்கத்தில் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் இருந்து கி.மு. 2 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு மூன்று வகைத் தூண்கள் அடிப்படையாக அமைந்த தன்மையை விளக்கி, பாத்தினன் தேவாலயக் கட்டட அமைப்புகள், கலை நிர்மாணிப்புகள் என்பன பற்றி விளக்குக. *(10 புள்ளிகள்)*

**6.** இறப்பின் பின்னரான ஆத்மா பற்றிக் கடுமையான நம்பிக்கை கொண்ட எகிப்திய மக்கள் அவ் ஆத்மாவை திருப்திப்படுத்துவதற்காக இறந்த உடலைப் பாதுகாப்பதற்கும் பூஜை வழிபாடுகளைச் செய்வதற்கும் பழக்கப்பட்டிருந்தனர்.

(i) எகிப்திய மக்களின் வழிபாடு, நம்பிக்கை பற்றிய தகவல்களை வழங்கும் சான்றுகள் புதைகுழிகளிலிருந்து கிடைக்கப்பெற்றன. அவற்றுள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(ii) எகிப்திய மக்கள் 'கா' என எதனைக் குறிப்பிடுகின்றனர் என்பதைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) மரணத்தின் பின்னரான ஆத்மாவைப் பாதுகாப்பதற்கும் திருப்திப்படுத்துவதற்கும் செய்யப்படும் சடங்குகள், எகிப்தில் பெருமைக்குரிய கலாசாரமும் கட்டடக்கலை நிர்மாணிப்புக்கள் பலவும் உருவாவதற்குக் காரணமாக அமைந்தன. ஆராய்க. *(10 புள்ளிகள்)*

* * *

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව **ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව** ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் **இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்** பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத்
Department of Examinations, Sri Lanka Department **Department of Examinations, Sri Lanka** Department of Examinations, Sri Lanka Department

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

චිත්‍ර කලාව II
சித்திரக்கலை II
Art II

**51 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **பின்பக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள் கூட்டமும்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.

※ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

※ பொருட்களினதும் செடி/ கிளையினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு மற்றும் தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

※ பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற தன்மையில் வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற்கொண்டு வர்ணந் தீட்டுக.

※ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

※ பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

※ பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ளமுடியும்.

※ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

※ ※ ※

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

51 T III

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் :

- கீழே தரப்பட்டுள்ள **அ, ஆ, இ** பகுதிகளிலிருந்து **ஒரு** பகுதியை மாத்திரம் தெரிவுசெய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவுசெய்து **வர்ணச் சித்திரம்** ஒன்றை வரைக.
- உமது பரீட்சைச் **சுட்டெண்ணையும்** தெரிவு செய்த வினாவின் **இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- சித்திரத்தைக் கையளிக்கும்போது அது உலர்ந்திருத்தல் அவசியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.
- விரும்பிய வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ள முடியும். (நீர் வர்ணம், தூள் வர்ணம், போஸ்ரர் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது சிலவற்றின் கலவை)
- தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.

## பகுதி 'அ'

### சித்திர ஒழுங்கமைப்பு

❐ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் தெரிவு செய்க.

1. நீராடுதுறையில் நீராடும் பெண்கள்
2. அரைகுறை நாகரிக (முழுமையாக நாகரிகமடையாத) மக்கள் வாழுகின்ற ஒரு பகுதி
3. மீன் வியாபாரச் சந்தை / கிராமப்புற ஞாயிற்றுக்கிழமைச் சந்தை

## பகுதி 'ஆ'

### அலங்கார ஆக்கம்

❐ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவு செய்க.

4. நவீன பாணியிலான ஒரு பிராணியின் வடிவத்தைப் பயன்படுத்தி பத்திக் முறையில் அச்சுப் பதிக்கக்கூடிய சுவர் அலங்கரிப்பு ஒன்றை நிர்மாணிக்குக.
5. பாரம்பரிய தாவர அலங்கரிப்பு அலங்காரத்தைக் கொண்டு கதவுக்கான திரைச்சீலைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைத் தயாரிக்குக.
6. 3 x 5 அடி அளவுடைய மேசை விரிப்பொன்றை அலங்கரிப்பதற்கு மத்திய புள்ளியை அடிப்படையாகக் கொண்டு பரந்து செல்லும் முழுத்தள அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.

## பகுதி 'இ'

### கிறபிக் சித்திர நிர்மாணிப்பு

❐ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவு செய்க.

7. 'பாரம்பரிய கிராமியக் கலை' பற்றி விளக்குகின்ற ஆய்வு நூல் ஒன்றுக்குப் பொருத்தமான அட்டைப்படம் ஒன்றை நிர்மாணிக்குக.
8. 'அழகுக்கலை நிலையம்' ஒன்றின் விளம்பரத்துக்காக 4 x 6 அடி அளவுடையதும் எழுத்துக்களைக் கொண்டதுமான காட்சிப் பலகை ஒன்றை அலங்காரமானதாக நிர்மாணிக்குக.
9. மோட்டார் சைக்கிள் வியாபார நிலையமொன்றினால் சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கப்படும் விளம்பரப் பக்கம் ஒன்றை உருவப்படங்கள், எழுத்துக்களைக் கொண்டதாக நிர்மாணிக்குக.

* * *